**REVISED**

**செய்தி வெளியீடு எண்:117** **நாள் :20.03.2015**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்த மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம், இன்று சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில் மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, குடும்ப அட்டைதாரர்கள், இம்மாதத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விலையில்லா அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில், பருப்பு வகைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தையும் மாத இறுதி வரை பெற்றுக்கொள்ளும் வகையில், அங்காடிகளுக்கு கிடங்குகளிலிருந்து தொடர்ந்து இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று வரை 11 இலட்சத்து 6 ஆயிரத்து 453 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 3 இலட்சத்து 56 ஆயிரத்து 738 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் புதிய குடும்ப அட்டைகள் கோரி பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து 60 நாட்களுக்குள் அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

போலி குடும்ப அட்டைகளை களைய நடவடிக்கைகள் மேற்கொண்டு, நியாயவிலைக் கடைகள் வேலை நேரத்தில் திறக்கப்பட்டு விநியோகம் சீரான முறையில் நடைபெறுவதையும், பொது விநியோகத் திட்ட கிடங்குகளிலிருந்து, நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படும் லாரிகள், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடங்களிலேயே நகர்வு செய்யப்பட்டு, அரிசி மூட்டைகளின் எடையை துல்லியமாக குறிப்பிட்டு, அங்காடிகளுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், ஜூன் 2011 முதல் மார்ச் 2015 வரையிலான காலத்தில் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 482 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 3 இலட்சத்து 26 ஆயிரத்து 629 மனுக்கள் அன்றைய தினத்திலேயே தீர்வு செய்யப்பட்டும், மீதமுள்ள 15 ஆயிரத்து 853 மனுக்கள் பின்னரும் தீர்வு செய்யப்பட்டுள்ளன. பொது

மக்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ள இவ்வகை முகாம்களை நடத்தும் ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான்.

நுகர்வோர்வாங்கும் பொருட்களின் தரம் தொடர்பான குறைபாடுகள் குறித்து தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் தீர்வு காண, மாநில நுகர்வோர் சேவை மையத்தினை 044 – 28592828 என்ற தொலைபேசி எண்ணிலும், consumer@nic.in என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொண்டு பயன் பெறலாம். மேலும் கீழ்க்கண்ட கைபேசி எண்களில் குறுஞ்செய்திகளும் அனுப்பலாம்.

72 9998002     8680018002     8680028003

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களின் முழுப்பயன்களும் உரியவர்களை சென்றடைய அலுவலர்கள் எடுத்த கூட்டுமுயற்சியின் பயனாக, இன்று வரை அத்தியாவசியப் பொருட்கள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் 22,881 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுள் 661 பேர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (BM Act) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர், திரு.முகம்மது நசிமுத்தின் இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (பொ) திரு.சு.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., மற்றும் உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**